**செய்தி வெளியீடு எண்: 011** **நாள்: 08.01.2013**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழகத்தில் பருவமழை பொய்த்துவிட்டதன் காரணமாகவும், தமிழகத்திற்குரிய காவேரி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிடாததன் காரணமாகவும், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதில் தாமதம் எற்பட்டதோடு மட்டுமல்லாமல், அதனை முன்னதாகவே மூடிவிடவும் நேரிட்டதால் 11 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட சம்பா பயிர்களில் கடைமடைப் பகுதிகளில் உள்ள பயிர்கள் பாதிப்படையும் நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளின் துயர்களை களையும் வகையில் நிவாரண உதவிகளை அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழக மக்கள் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், அரிசி பெறும் சுமார் 1 கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 ரூபாய் மதிப்புடைய 1 கிலோ பச்சரிசி, 40 ரூபாய் மதிப்புடைய 1 கிலோ சர்க்கரை மற்றும் 100 ரூபாய் ரொக்கம் என 160 ரூபாய் மதிப்பிலான சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள்.

இந்தச் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்புத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.1.2013 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நீலகிரி மாவட்டம், கோடநாட்டில் உள்ள கோத்தகிரி கூட்டுறவு பண்டக சாலையின் கோடநாடு நியாய விலைக் கடையில் துவக்கி வைப்பார்கள். அப்போது, பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகளையும் வழங்குவார்கள்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை,
நாள்: 8.1.2013